**தேதி :** 11.02.2026 **SC.No. :** 169/2024 PW :**8** மருத்துவர்.தினேஷ்

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

காயம்பட்ட நபருக்கு நான் பார்த்த காயங்கள் எவ்வளவு மணி நேரத்திற்குள் ஏற்பட்டிருக்கும் என்றால் காயம்பட்டவருக்கு பெரிய இரத்தக்குழாய் சேதமடைந்திருந்ததினால் அதிலிருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. அந்த இரத்தத்தை நிறுத்த வேண்டும் என்றால் சிகிச்சை அளித்து தான் நிறுத்த முடியும். அதனால் எவ்வளவு நேரத்திற்கு முன்னால் காயம் ஏற்பட்டது என்று நோயாளி சொன்ன நேரத்தை வைத்து தான் சொல்ல முடியும். அ.சா.ஆ.6 ஆவணத்தின் அடிப்படையில் தான் புலன் விசாரணை அதிகாரிவிசாரணையில் நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். வாஸ்குலார் சிகிச்சைக்கு மதுரைக்கு அனுப்பியிருந்தால் அவரது உயிரை காப்பாற்றியிருக்க முடியாது என போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு வரும்போது சுயநினைவில் இருந்தார் என்றால் சரிதான். என்னுடைய கருத்துரு தவறானது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

**இல்லை.**

**சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம்** Thiru. Sivamurugan, Junior Assistant **திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.12 17:00:12 +0530